147



6 - JAN 1923

உ

சிவமயம்.

திருஞானசம்பந்த குருப்யோ நம:

நித்யானு சந்தா... மென்னும்

# பன்னிரு திருமுறைத் திரட்டு.

இஃது

திண்டிவனம்

## திருஞானசம்பந்த சுவாமிகள்

மடம்.

சே. மு. பெ. குழந்தைவேலு உடையார்

...அவர்கள் வேண்டுகோளின்படி

...வேதபாராயண ஸ்ரீமான்

... பிள்ளை அவர்களால்

...ஸ்ரீகிருஷ்ண விலாசம் பிரஸில்

...சிடப்பட்டது.

1922.

923:412x
N122
125851

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநெறித்தமிழ்வேதமாகிய

6 - JAN 1923

# தேவாரப் பதிகங்கள்

திருவலிவலம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பிடியதனுருவுமைகொளமிகுகரியது
வடிகொடுதனதடிவழிபடுமவரிடர்
கடிகணபதிவர வருளினன்மிகுகொடை
வடிவினர்பயில்வலி வலமுறையிறையே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கடம்பூர் பண் திருக்குறுந்தொகை,

திருச்சிற்றம்பலம்.

நக்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்கடனடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே. 1.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோழம்பம் பண் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சமரசூர பன்மாவைத் தடிந்தவேற்
குமரன்றாதை நற்கோழம்ப மேவிய
அமரர்கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமரலோக மதாளுடை யார்களே.

திருச்சிற்றம்பலம்.

800
125801

சிவமயம்.

திருஞான சம்பந்த சுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப் பதிகங்கள்.

திருப்பிரமபுரம் பண் நட்டபாடை [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வ
னேடுடைய மலரான்முன நாள்பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறிய பிரமாபுரமேவிய பெம்மானிவன் றன்னை
யொருநெறிய மனம்வைத் துணர் ஞானசம்பந்தன் னுரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.

## இரண்டாந் திருமுறை.

திருப்பூந்தராய் பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

செந்நெலங் கழனிப்பழனத் தயலேசெழும்
புன்னைவெண்கிழியிற் பவளம் புரைபூந்தராய்
துன்னி நல்லிமையோர் முடிதோய்கழலீர் சொலீர்
மின்னுசெஞ்சடையிற் பிறைபாம்புடன் வைத்ததே.

மகரவார்கடல் வந்தணவும் மணற்கானல்வாய்
புகலிஞான சம்மந்தனெழில் மிகுபூந்தராய்
பகவனாரைப்பரவு சொன்மாலை பத்தும்வல்லா
ரகல்வர் தீவினை நல்வினை யோடுடனாவரே.

திருச்சிற்றம்பலம்.

# மூன்றாந்திருமுறை.

## கோயில் பண் காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாய்நறுநெய் யொடுபாறயிரந்தணர் பிரியாதசிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறையோடு பல்கீதமும்பல்சடைப்பனிகால்கதிர்வெண்டிங்கள்
சூடினாயருளாய்சுருங்க வெந்தொல் வினையே.

நாறுபூம்பொழி னண்ணியகாழியுளான் மறைவல்லஞான சம்பந்த
னாறுமின் றமிழாலுயர்ந்தாருறை தில்லைதன்னு
ளேறுதொல்புகழேந்துசிற்றம்பலஞ் சீசனையிசையாற்சொன்னபத்திவை
கூறுமாறுவல்லா ருயர்ந்தாரொடுங் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு ஸ்வாமிகள்

அருளிச்செய்த

## திருவதிகை வீரட்டானம் பண் கொல்லி. [4-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமை பல செய்தன நானறியே
னேற்றாயடிக்கே இரவும் பகலும் பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென் வயிற்றின கம்படி யேகுடரோடு தொடக்கிமுடக்கியிட
ஆற்றேனடி யேனதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே.

போர்த்தாயங்கோரானை யினீருரிதோல்புறங்காடரங்கா நடமாடவல்லா
யார்த்தரக்கன்றனைமால்வரைக்கீழடர்ந்திட்டருள் செய்தவதுகருதாய்
வேர்த்துப்புரண்டும்விழுந்துமெழுந்தாலென்வேதனையானவிலக்கியிடா
யார்த்தார்புனல்சூழதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே.

திருச்சிற்றம்பலம்.

## கோயில் திருக்குறுந்தொகை. (5ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

அன்னம்பாலிக்குந் தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம்பாலிக்கு மாறுகண்டின்புற
இன்னம்பாலிக்குமோ விப்பிறவியே.

மதுரவாய்மொழி மங்கைபோர் பங்கினன்
சதுரன் சிற்றம்பலவன் றிருமலை
அதிரவார்த்தெடுத்தான் முடிபத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந்துய்ம்மினே.

## திருஅதிகைவீரட்டானம் திருவடித்திருத்தாண்டகம் [6-திருமுறை.]

திருச்சிற்றம்பலம்.

அரவணையான்சிந்தித்தரற்றுமடி யருமறையான்சென்னிக்கணியாமடி
சரவணத்தான்கைதொழுதுசாருமடி சார்ந்தார்கட்கெல்லாஞ்சரணாமடி
பரவுவார்பாவம்பறிக்குமடி பதினெண்கணங்களும்பாடுமடி
விரவுநீர்த்தென்கெடில நாடனடி திருவீரட்டானத்தெஞ் செல்வனடி

தேவாந்ததேவனைத்தேவரெல்லாந் திருவடிமேலலரிட்டுத்தேடிநின்று
நாவார்ந்தமறைபாடிநட்டமாடி நான்முகனுமிந்திரனுமாலும்போற்றக்
காவார்ந்தபொழிற்சோலைக்கானப்பேரூற் கழுக்குன்றத்துச்சிபாய் [கடவுளைநின்
பூவார்ந்தபொன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண் [ணியனே

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

### திருவெண்ணெய்நல்லூர் பண் இந்தளம் [7-ம் திருமுறை.]

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடீ பெருமானே யருளாளா
வெத்தான்மறவா தேநினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளா யினியல்லே னெனலாமே.

காரூர் புனலெய்திக்கரைகல் லித்திரைக்கையாற்
பாரூர் புகழெய்தித் திகழ்பன்மா மணியுந்திச்
சீரூர் பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூரட்டுறையு
ளாரூர னெம்பெருமாற்காளல் லேனெனலாமே. திருச்சிற்றம்பலம்.

## மாணிக்கவாசகசுவாமிகளருளிச்செய்த

### திருச்சதகம் [8-ம் திருமுறை.]

மெய்தான ரும்பிவிதிர்விதிர்த்துன் விரையார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துனைப் போற்றிசயசய போற்றியென்னுங்
கைதானெகிழவிடே னுடையா யென்னைக்கண்டு கொள்ளே.

ஆமாறுன் றிருவடிக்கேயகங்குழை யேனன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயிறூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

திருச்சிற்றம்பலம்.

## திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா.

(9 ம் திருமுறை) திருச்சிற்றம்பலம்.

ஒளிவளர் விளக்கே யுலப்பிலாவொன்றேயுணர்வுசூழ்கடந்ததோ ருணர்வே, தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக்குன்றே சித்தத்துட்டித் திக்குந்தேனே, யளிவளருள்ளத் தானந்தக்கனியே யம்பலமாடரங்காக, வெளிவளர் தெய்வக்கூத்துகந்தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே. திருச்சிற்றம்பலம்,

## சேந்தனாருளிச்செய்த் திருப்பல்லாண்டு.

திருச்சிற்றம்பலம்.

ஆரார்வந்தாரமரர் குழாத்தி லணியுடையா திரைநாள்
நாராயணனோடு நான்முகனங்கி யிரவியுமிந்திரனுந்
தேரார்வீதியிற் றேவர் குழாங் கடிசையனைத்தும நிறைந்து
பாரார்தொல்புகழ பாடியுமாடியும பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

## திருமூலநாயனார் திருமந்திரம்.

(10 ம் திருமுறை) திருச்சிற்றம்பலம்.

சிவனோடொக்குந் தெய்வந் தேடினுமில்லை
யவனோடொப்பாரிங்கி யாவருமில்லை
புவனங்கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச்சடைமுடித் தாமரையானே.
அரகரவென்னவரிய தொன்றில்லை
அரகரவென்ன வறிகிலர்மாந்தர்
அரகரவென்ன வமரருமாவர்
அரகரவென்ன் வறுபிறப்பன்றே. திருச்சிற்றம்பலம்.

## காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி.

(11 ம் திருமுறை.) திருச்சிற்றம்பலம்.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங்காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்துவானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்பதிடர்.

காலையேபோன்றிலங்கு மேனிகடும்பகலின்
வேலையேபோன்றிலங்கும் வெண்ணீறு மாலையின்
தாங்குருவேபோலுஞ்சடைக் கற்றைமற்றவர்க்கு
வீங்கிருளே போலுமிடறு. திருச்சிற்றம்பலம்.

## நற்கீரதேவ நாயனார் திருமுருகாற்றுப்படை.

திருச்சிற்றம்பலம்.

குன்றமெறிந்தமையுங் குன்றப்போர்செய்தமையு
மன்றங்கமரரிடர் தீர்த்தமையு—மின்றென்னைக
கைவிடாநின்றமையுங் கற்பொதும்பின் மீட்டமையும்
மெய்விடாவீரன் கைவேல்.

உன்னையொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னையொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பாவானோ் கொடியவினை தீர்த்தருளும
வேலப்பா செந்திவாழ்வே. திருச்சிற்றம்பலம்.

## சேக்கிழார் நாயனார் பெரியபுராணம்.

(12 ம் திருமுறை) திருச்சிற்றம்பலம்.

உலகெலா முணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியாய் யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

# திருவெம்பாவை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியுமந்தமு மில்லாவரும் பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதேவளருதியோவன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதாரமளியின் மேனின்றும் புரண்டிங்ங
னேதேனுமாகாள் கிடந்தா ளென்னே யென்னே
யீதேயெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். [1]

பாசம்பரஞ்சோதிக் கென்பாயி ராப்பகனாம்
பேசும்போ தெப்போதிப் போதார மளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசியிவையுஞ் சிலவோ விளையாடி
யேசுமிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன்சிவலோகன் றில்லைச் சிற்றம்பலத்
தீசனார்க்கன் பார்யா மாரேலோ ரெம்பாவாய். [2]

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதி ரெழுந்தென்
னத்தனா னந்தன முதனென் றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீரீசன் பழவடியீர் பாங்குடையீர்

புத்தடியோம்புன்மை தீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோ நின்னன்புடைமை யெல்லோமறியோமோ
சித்தமழகி யார்பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டுமெமக்கேலோ ரெம்பாவாய். [3]

ஒண்ணித்தில நகையாயின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத்துயின்றவமே காலத்தைப் போக்காதே.
விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப்பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருகயாமாட்டோ நீயேவந்
தெண்ணிக்குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய் [4]

மாலறியா நான்முகனுங் காணாமலையினைநாம்
போலறிவோ மென்றுள்ளப் பொக்கங்களேபேசும்
பாலூறுதேன்வாய்ப் படிறீகடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும்பாடிச் சிவனேசிவனே யென்
றோலமிடினு முணரா யுணராய்கா
ணேலக்குழலி பரிசேலோ ரெம்பாவாய். [5]

மானேநீ நென்னலை நாளைவந்துங்களை
நானே யெழுப்புவனென்றலு நாணாமே
போனதிசை பகராயின்னம் புலர்ந்தின்றோ
வானேநிலனே பிறவே யறிவரியான்
றானேவந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனேயுருகா யுனக்கேயுறு மெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப்பாடேலோ ரெப்பாவாய். [6]

125851

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற்கரியா னொருவனிருஞ் சீரான்
சின்னங்கள்கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென்னா முன்னந்தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரையனின் னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாயின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். [7]

கோழிசிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழிலியம்ப வியம்பும வெண்சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில்பரங்கருணை
கேழில்விழுப்பொருள்கள பாடினோங் கேட்டிலையோ
வாழியீதென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியானன் புடைமையாமாறு மிவ்வாறோ
வூழிமுதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங்காளனையே பாடேலோ ரெம்பாவாய். [8]

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப்பிரானாகப் பெற்றவுன் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோ
மன்னவரே யெங்கணவராவாரவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்னவகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்னகுறையு மிலோமேலோ ரெம்பாவாய். [9]

பாதாளமேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார்புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதையொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு

மோதவுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில்குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப்பாடும் பரிசேலோ ரெம்பாவாய். [10]

மொய்யார்தடம் பொய்கைபுக்கு முகேரென்னக்
கையாற்குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையா வழியடியோம் வாழ்ந்தோங் காணாரழல்போற்
செய்யாவெண்ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண்டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற்காப்பா யெமையேலோ ரெம்பாவாய். [11]

ஆர்த்த பிறவித்துயர்கெட நாமார்த்தாடுந்
தீர்த்தனற்றில்லைச் சிற்றம்பலத் தேதீயாடுங்
கூத்தனிவ்வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும்படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசிவளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்யவணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும்பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தியிருஞ்சுனை நீராடேலோ ரெம்பாவாய். [12]

பைங்குவளைக்கார் மலராற்செங்கமலப் பைம்போதா
லங்கங்குருகினத்தாற் பின்னுமரவத்தாற்
றங்கண்மலங்கழுவு வார்வந்து சார்தலினா
லெங்கள்பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ்சிலம்ப பச்சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப்பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய். [13]

காதார்குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதைகுழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம்பாடி
வேதப்பொருள் பாடியப் பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதிதிறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்துநம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத்திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். [14]

ஓரொருகா லெம்பெருமானென்றென்றே நம்பெருமான்
சீரொருகால்வாயோவாள் சித்தங்களிகூர
நீரொருகாலோர்வா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணி
பேரரையற்கிங்ஙனே பித்தொருவ ராமாறு யாள்
மாரொருவ ரிவ்வண்ணமாட் கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப்பூண் முலையீர் வாயாரநாம் பாடி
யேருருவப்பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய் [15]

முன்னிக் கடலைச்சுருக்கி யெழுந்துடையா
ளென்னத்திகழந் தெம்மையாளுடையா ளிட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச்சிலை குலவிநந் தம்மையாளுடையா
டன்னிற்பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னியவண்மக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப்பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். (16)

செங்கணவன் பாற்றிசைமுகன் பாற்றேவர்கள்பா
லெங்குமிலாத தோரின்பநம் பாலதாக்
கொங்குண்கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்கு நம்மில்லங்கடோறு மெழுந்தருளிச்

செங்கமலப்பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்கண்ணரசையடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப்பாடி நலந்திகழப்
பங்கயப்பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய். (17)

அண்ணாமலை யானடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின்மணித்தொகை வீறற்றாற்போற்
கண்ணாரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணாரொளி மழுங்கித் தாரகைகடாமகலப்
பெண்ணாகியாணாயலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணாரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய் ()

உங்கையிற்பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப்பழஞ் சொற்புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமானுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்பரல்லார் தோள்சேரற்க
வெங்கையுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல்பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப்பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென்ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். [19]

போற்றியருளுக நின்னாதியாம் பாதமலர்
போற்றியருளுக நின்னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லா வுயிர்க்குமீறா மிணையடிகள்
போற்றிமானான் முகனுங்காணாத புண்டரீகம்
போற்றியாமுய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாமார்கழி நீராடேலோ ரெம்பாவாய். [20]

திருச்சிற்றம்பலம்.